**ஐக்கிய அமெரிக்க தூதரகம்**
**கொழும்பு**
**ஊடக அறிக்கை**

பொது அலுவல்கள் பிரிவு
தொ.பே: +94 (11) 249-8100 ● பெக்ஸ்: +94 (11) 244-9070
ஈமெயில்: VanHornNT@state.gov ● http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 20190925

**சுற்றுலா தளங்களை பிளாஸ்டிக் அற்றதாக்குவதற்கு அமெரிக்க முன்னெடுப்பின் உதவி**

**கொழும்பு, செப்டெம்பர் 25, 2019** – அறுகம் குடாவை நிலையான மற்றும் பசுமையான சுற்றுலா தளமாக்குவதற்கு அமெரிக்க அரசாங்கம் உதவி வருகிறது. சர்வதேச உதவிக்கான அமெரிக்க முகவரமைப்பினால் (யூஎஸ்எயிட்) அனுசரணையளிக்கப்படும் "கழிவுகளற்ற அறுகம் குடா" எனும் முன்னெடுப்பு ஒன்றினூடாக இந்த திட்டமானது மீள்நிரப்பு நிலையங்களுக்கு இலவச குடிநீர் வழங்குவதுடன், பிளாஸ்டிக் போத்தல்களை மீள்சுழற்சி செய்கிறது. அத்துடன், பிளாஸ்டிக் கழிவுகளை குறைப்பதன் நன்மைகளையும் ஊக்குவிக்கிறது. அறுகம் குடாவில் மட்டும், 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து, 230,000 இற்கும் அதிகமான போத்தல்கள் கழிவுகள் கொட்டப்படும் இடங்களுக்கோ அல்லது கடலுக்கோ வருவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை முழுவதிலும் நீர் மீள்நிரப்பு நிலையங்கள் அமைந்திருக்கும் 35 இடங்கள் பற்றி www.getwater.lk இணையத்தளம் விபரமளிக்கிறது.

"பிளாஸ்டிக் கழிவுகளை குறைப்பதானது இலங்கையின் கடல் பிரதேசங்கள் மற்றும் நீர்நிலைகளின் அழகை எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாப்பதாக அமைவது மட்டுமல்லாது, மக்களின் வாழ்வாதாரங்களையும் அது பாதுகாப்பதுடன், வீழ்ச்சியொன்றின் போது சுற்றுலாத்துறையையும் ஊக்குவிக்கிறது," என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ் தெரிவித்தார். "அதாவது, மீனவர்கள் ஏற்புடையதொரு மீன்பிடியை நம்பியிருக்கலாம், சமூகங்களுக்கு உள்நாட்டில் உற்பத்தி செய்த மீள்சுழற்சி பொருட்கள் கிடைக்கக்கூடியதாக இருக்கும், மற்றும் மிக முக்கியமாக சுற்றுலாப் பயணிகள் அழகிய கடற்கரைகளுக்கு செல்லக்கூடியாகவும் இருக்கும்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த திட்டத்தின் கீழ், ஏனைய கழிவுகளில் இருந்து பிளாஸ்டிக் போத்தல்கள் பிரித்தெடுப்பதன் நிமித்தம் அறுகம் குடா பிரதேசத்திலுள்ள வர்த்தக ஸ்தானங்களுக்கு தொட்டிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு நாளும் வாகனமொன்றினால் அவை சேகரிக்கப்பட்டு 100 சதவீதமும் பிளாஸ்டிக் பாலியஸ்டர் நூலாக மீள்சுழற்சி செய்யப்படும் ஸ்தானமொன்றிற்கு அந்த பிளாஸ்டிக் போத்தல்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. இதன்மூலம் பாலியஸ்டர் உற்பத்தியிலான புதிய பிளாஸ்டிக் தேவை குறைகிறது. சமூக மேம்பாடும் கல்வியும் முக்கியமாகும். சுற்றாடலுக்கும் மனித ஆரோக்கியத்திற்கும் பிளாஸ்டிக்கினால் ஏற்படக்கூடிய சாத்தியமான தீங்குகள் பற்றியும் கழிவுகளை குறைத்துக் கொள்வதற்கு உதவக்கூடிய வழிகள் குறித்தும் சுற்றுலா வருபவர்களும் உள்ளூர் மக்களும் கற்றுக்கொள்கின்றனர்.

பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் கழிவுகளினால் ஏற்படுத்தப்பட்ட கடல் சுற்றுச்சூழல் சீரழிவை குறைப்பதற்கு யூஎஸ்எயிட் மாநகர கழிவு மீள்சூழற்சி திட்டம் அதன் பங்காளர்களுடன் இலங்கை முழுவதும் செயற்பட்டு வருகிறது.